**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**

**அ.வ.எண்.144/2024 நாள்:17.11.2025**

**வா.சா:– 2 சக்திவேல் ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

குறுக்கு விசாரணை (1 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில்):–

வழக்கு தாக்கல் செய்துள்ள செந்தில்குமார் என்பவர் எனது மாமா பையனா என்றால் ஆமாம். உறவுமுறை. எனக்கு கொடுமுடி கிராமம் தளுவம்பளையத்தில் எவ்வளவு பூமி உள்ளது என்றால் 5 ஏக்கர் பூமி உள்ளது. தாவா சொத்திற்கு அருகில் எவ்வளவு பூமி, எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.683/5,6,8ல் பூமி உள்ளது. மேற்படி சர்வே எண்களில் 20 சென்ட் பொதுவில் பாத்தியம். பாட்டி வழியில் வந்த சொத்து. அதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லையா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு அருகில் எங்களுக்கு பாத்தியப்பட்ட பூமி எதுவும் இல்லை என்றால் சரியல்ல. இருக்கிறது. எனது மாமா பையன் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யான சங்கதிகளை கொண்டு முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செந்தில்குமார் அவரது அம்மா அருக்காணி ஆகியோர் குடும்பத்திற்கு ரீ.ச.எண்.683ல் எவ்வளவு பூமி பாத்தியம் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ரீ.ச.எண்.683/1 மற்றும் 3ல் உள்ள பூமிகளை எனது மாமா சுப்ரமணியம் அவரது மனைவி 2ம் வாதி அருக்காணியும் கிரையத்திற்கு வாங்கினார்கள். எந்த வருடம் வாங்கினார்கள் என்றால் சுமார் 40 வருடத்திற்கு முன்னர் கிரையம் வாங்கினார்கள். கிரையம் வாங்கிய பூமிகளை கிரையப்பத்திரப்படி எனது மாமா சுப்ரமணியமும் அவருக்கு பின்னர் அவரது மகன் செந்தில்குமார் மற்றும் சுப்ரமணியத்தின் மனைவி அருக்காணியும் அனுபவித்து

வருகிறார்கள் என்றால் சரிதான். கிரையத்தேதியில் இருந்து தற்போது வரை கிரையபூமியில் பயிர் செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். சுப்ரமணி, அருக்காணி, அவரது முன்னோர்கள் ஆகியோர்களுக்கு தாவா சொத்தில் எவ்வித அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. அனுபவம் உள்ளது. வா.சா. 1 கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.11.17 14:05:37 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |